අග්‍රාමාත්‍ය කාර්යාලය
பிரதம அமைச்சரின் அலுவலகம்
PRIME MINISTER'S OFFICE

**Presidential Task Force for Essential Services**

58, ශ්‍රීමත් අර්නස්ට් ද සිල්වා මාවත, කොළඹ 07.
58, ஸ்ரீமத் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை, கொழும்பு 07.
58, Sir Ernest de Silva Mawatha, Colombo 07.

මගේ යොමුව / எனது குறியீடு / My Ref. PTF/01/Circular/01 | ඔබේ යොමුව / உமது குறியீடு / Your Ref. | දිනය / திகதி / Date 2020.03.30

சுற்றறிக்கை இலக்கம்: - PTF/02

**பொலிஸ் மா அதிபர்**

**உணவு, மருந்துப் பொருட்கள் உட்பட அத்தியாவசிய சேவைகளைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரங்களைத் துரிதமாக வழங்குதல்**

இலங்கையிலிருந்து புதிய கொரோனா வைரஸை ஒழிப்பதற்கு அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் தேசிய வேலைத்திட்டத்துடன் இணைந்த வகையில், ஒட்டுமொத்த மக்கள் வாழ்வினையும் உரிய முறையில் நடாத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளைத் தொடர்ச்சியாக வழங்குவது அத்தியாவசியமானது என்பதுடன், அதற்கு மாகாண, மாவட்ட, பிரதேச செயலக, கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் பொதுமக்களின் நாளாந்த தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஆவண செய்வது முக்கியமான பொறுப்பாகும்.

02. எனினும், பொதுமக்களுக்காக உணவு, மருந்துப் பொருட்கள் மற்றும் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு, சேவைகளை வழங்குவதற்குப் பயணிக்கும்போது தேவையான ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பாக சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது. எனவே, கீழே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் சேவைகள் தொடர்ச்சியாக வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரங்களை வழங்கும் வேலைத்திட்டத்தினைத் துரிதப்படுத்துவது அவசியமாகும்.

03. அதற்கேற்ப, கீழே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளுக்குரிய அத்தியாவசிய சேவைகளுக்கான ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரங்களைப் பின்வரும் நிறுவனத் தலைவர்களின் விதந்துரையின் அடிப்படையில் வழங்குவதற்கு ஏற்புடைய பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்குமாறும், முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் விதந்துரை வழங்கும் நிறுவனங்களுக்குச் சென்று ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான பொறிமுறையொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.



කාර්යාලය / அலுவலகம் / Gen. Office 2575317, 2575318
ෆැක්ස් / பெக்ஸ் / Fax 2574143, 2575454, 2575310
විද්‍යුත් තැපෑල / ஈ மெயில் / E-mail secpm@pmoffice.gov.lk

| இல. | சேவை வகையினம் | விதந்துரை |
|---|---|---|
| 01. | மின்சாரம் வழங்குதல்<br><br>**(இலங்கை மின்சார சபை/ இலங்கை மின்சார தனியார் நிறுவனம்)** | மாவட்டத்தை ஓர் அலகாகக் கருதி மாவட்டத்தினுள் அத்தியாவசிய பராமரிப்பு, சேவைகள் மற்றும் தொடர்ச்சியான மின்சார வழங்கலுக்கு அத்தியாவசியமான குறைந்தபட்ச ஆளணி, பொது முகாமையாளர்/ மாவட்ட மின்சாரப் பொறியியலாளரின் கோரிக்கைக்கு ஏற்ப மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 02. | நீர் வழங்கல்<br><br>**(தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை)** | மாவட்டத்தை ஓர் அலகாகக் கருதி மாவட்டத்தினுள் அத்தியாவசிய பராமரிப்பு, சேவைகள் மற்றும் தொடர்ச்சியான நீர் வழங்கலுக்கு அத்தியாவசியமான குறைந்தபட்ச ஆளணி, பொது முகாமையாளர்/ மாவட்ட முகாமையாளரின் கோரிக்கைக்கு ஏற்ப மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 03. | எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் விநியோகம் மற்றும் போக்குவரத்து<br><br>**(இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்/ இலங்கை பெற்றோலியக் களஞ்சியப்படுத்தல் முனைய நிறுவனம்/ இலங்கை இந்தியன் ஒய்ல் நிறுவனம்)** | மாவட்டத்தை ஓர் அலகாகக் கருதி மாவட்டத்தினுள் அத்தியாவசிய எரிபொருள் போக்குவரத்து மற்றும் விநியோகத்திற்கு அத்தியாவசியமான குறைந்தபட்ச ஆளணி, பிரதேச முகாமையாளர்/ விநியோக முகாமையாளரின் கோரிக்கைக்கு ஏற்ப மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 04. | எரிவாயு விநியோகம் மற்றும் போக்குவரத்து<br><br>**(லிட்ரோ நிறுவனம்/ லாப் கேஸ் தனியார் நிறுவனம்)** | ஏற்புடைய நிறுவனத்தின் பொது முகாமையாளர் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரியொருவரின் கோரிக்கைக்கு ஏற்ப மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 05. | மீன்பிடித் தொழிலில் ஈடுபடுதல் மற்றும் கடற்றொழில் செயற்பாடுகளுக்கு ஏற்புடைய வசதிகளை வழங்கும் | கடற்றொழில் பணிப்பாளர் நாயகம்/ மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் அல்லது |

| | | |
|---|---|---|
| | நிறுவனங்கள் மற்றும் கடற்றொழில் மொத்த விற்பனை நிலையங்கள்<br><br>**(சில்லறைக் கொள்வனவுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் கூடாது)** | மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 06. | துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறைச் சேவைப் பணிகள் மற்றும் விமான சேவைப் பணிகள்<br><br>**(இலங்கை துறைமுக அதிகாரசபை/ இலங்கை விமான நிலையங்கள் மற்றும் விமானச் சேவைகள் நிறுவனம்)** | அத்தியாவசியமான குறைந்தபட்ச ஆளணியுடன் ஏற்புடைய நிறுவனத்தின் பொது முகாமையாளர் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரியொருவரின் விதந்துரை |
| 07. | கால்நடை உணவுகள் மற்றும் கால்நடை மருந்துப் பொருட்களை வழங்குதல் | பணிப்பாளர் நாயகம் - கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்/ பிரதேச மிருக வைத்திய அதிகாரி அல்லது மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 08 | மருந்துப் பொருட்களை மொத்தமாக விநியோகித்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் மருந்துப் பொருட்களை வீடுகளுக்கு விநியோகித்தல் (அனுமதிக்கப்பட்ட அரச மருந்தகங்கள், பாமசி, மருந்துப் பொருட்களை விநியோகிக்கும் நிறுவனங்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற முகவர் நிறுவனங்களுக்கு)<br><br>புதிய கொரோனா வைரஸ் நிலைமைக்கு சிகிச்சையளிப்பதற்கு அவசியமான உபகரணங்கள் தயாரிப்பு மற்றும் அதற்கு ஏற்புடைய ஆராயச்சிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் | சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்/ மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர்/ மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்/ பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி/ பொது முகாமையாளர் அல்லது மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம் பெற்ற அதிகாரியொருவர் மற்றும் ஏற்புடைய நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்தின் மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 09. | கழிவு முகாமைத்துவம், தகனச்சாலைச் சேவைகள், தீயணைப்புச் சேவைகள் | உள்ளூராட்சி நிறுவனங்களின் நகர ஆணையாளர்/ செயலாளரின் விதந்துரை |

| | | |
|---|---|---|
| | உட்பட உள்ளூராட்சி நிறுவனங்களினால் நடாத்திச் செல்லப்படும் அத்தியாவசிய சேவைகள் | அல்லது மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 10. | வங்கிகள், அத்தியாவசிய வணிக மற்றும் ஏற்றுமதி, இறக்குமதிப் பணிகளுக்கு ஏற்புடைய காப்புறுதிச் செயற்பாடுகள், அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு, தனியார் பாதுகாப்புச் சேவைகள், மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், மாகாண சபைகள் உட்பட அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அரச நிறுவனங்களின் ஊழியர்கள் | அத்தியாவசியமான குறைந்தபட்ச ஆளணிக்கு ஏற்புடைய நிறுவனத் தலைவரின் கோரிக்கைக்கு ஏற்ப மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 11. | வெகுசன ஊடக நிறுவனங்கள் | ஏற்புடைய நிறுவனங்களின் ஊழியர் அடையாள அட்டை போதுமானதாகும். |
| 12. | பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த வர்த்தகக் கூட்டுத்தாபனத்திற்கான பொருட் போக்குவரத்து | கூட்டுறவு ஆணையாளர் அல்லது உதவிக் கூட்டுறவு ஆணையாளர்/ மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 13. | அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு வந்து விநியோகிக்கும் நிறுவனங்கள், தனியார் சில்லறை விற்பனை நிலையங்கள், மளிகைக் கடைகள் மற்றும் முட்டை, இறைச்சி, பால், மீன் உட்பட கால்நடை உற்பத்திகள் | ஏற்புடைய நிறுவனங்களின் எழுத்து மூலமான கோரிக்கைக்கு ஏற்ப மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 14. | உணவு, மருந்து உட்பட அத்தியாவசியப் பொருட் போக்குவரத்து மற்றும் கூரியர் சேவைகளை நடாத்திச் செல்லுதல்<br><br>பல்பொருள் பேரங்காடி வலையமைப்பு ஊடாக "Online" முறைமையில் பொருட் போக்குவரத்து | ஏற்புடைய நிறுவனங்களின் அதிகாரம் பெற்ற அதிகாரியொருவரின் கோரிக்கைக்கு ஏற்ப அல்லது ஏற்புடைய நபர்களின் கோரிக்கைக்கு ஏற்ப மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |

| | | |
|---|---|---|
| | உடனடி உணவுகளை வீடுகளுக்கு விநியோகிக்கும் நிறுவனங்கள்<br><br>பொருளாதார மத்திய நிலையங்களுக்கு மொத்தமாக பொருட்களை எடுத்துச் செல்லுதல் | |
| 15. | கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் பங்குபற்றும் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் தேயிலை விற்பனையாளர்களுக்கு | மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 16. | தேயிலைக் கொள்வனவாளர்கள் மற்றும் தேயிலைத் தரகர்களுக்கு | தேயிலைத் தரகர்கள் சங்கத் தலைவரின் கோரிக்கைக்கு ஏற்ப மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 17. | நடமாடும் வங்கி வசதிகள் (வீடுகளுக்குச் சென்று ATM இயந்திரங்கள் மூலம் பணம் பெற்றுக்கொள்ளும் வசதிகளை வழங்குவதற்கு மாத்திரம்) | ஏற்புடைய வங்கியின் பொது முகாமையாளர்/ ஏற்புடைய வங்கிக் கிளை முகாமையாளரின் கோரிக்கைக்கு ஏற்ப மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 18. | நெல், மரக்கறி, பழங்கள், தேயிலை, இறப்பர், தேங்காய், சிறு – ஏற்றுமதிப் பயிர்கள், பண்ணை, நாற்று மேடைகள் போன்ற கமத்தொழில் பணிகளில் ஈடுபடுகின்ற மற்றும் அது சார்ந்த விதைகள், கன்றுகள், உரம், இரசாயனப் பொருட்கள் போன்றவற்றை உற்பத்தி செய்கின்ற/ விநியோகிக்கின்ற நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் | கமத்தொழில் ஆலோசகர் இனங்காணும் குறைந்தபட்ச ஆளணிக்கு மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 19. | செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் புனித ஜோன் காவு வண்டிச் சேவைக்கு | இந்தச் சேவைகளை நடாத்திச் செல்வதற்காக ஒரு தடவையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் விதந்துரை |
| 20. | சந்தரப்பத்திற்கேற்ற வகையில் ஏற்படும் ஏனைய அத்தியாவசிய சேவைகள் - | மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |

| | | |
|---|---|---|
| | அனர்த்த, அவசர நிலைமைகளில் பங்குபற்றும் நபர்களுக்கு | |
| 21. | ஏற்றுமதி, இறக்குமதிப் பணிகளில் ஈடுபட்டுள்ள கப்பல்கள், விமான முகவர்கள் மற்றும் அந்த தடைநீக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் ஊழியர்கள் | அந்த நிறுவனங்களின் கோரிக்கைக்கு ஏற்ப இனங்காணப்படும் குறைந்தபட்ச ஆளணிக்கு மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளரின் விதந்துரை |
| 22. | அனுமதி பெற்ற பணத் தரகு நிறுவனங்கள், லங்கா கிளியர் நிறுவனம் மற்றும் ஏனைய அத்தியாவசியக் கடமைகளில் ஈடுபடும் மத்திய வங்கி திணைக்களங்களின் அதிகாரிகள் | இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அல்லது உதவி ஆளுநரின் விதந்துரை |

04. கிராமிய கமத்தொழில் பணிகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் தேயிலை, தேங்காய், இறப்பர், இலவங்கப்பட்டை, கரும்பு போனற ஏனைய சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மற்றும் கமத்தொழில் வாகனங்களுக்கு ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரம் அவசியமில்லை. கமத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் வரையறுத்த நிலப் பிரதேசத்தினுள் மாத்திரம் இது செல்லுபடியாகும்.

05. பொலிஸ் சேவை, முப்படைகள், சிவில் பாதுகாப்புப் படையணி மற்றும் சுகாதார சேவையில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்கள் ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும். அதற்கு அவர்கள் தமது உத்தியோபூர்வ அடையாள அட்டையைக் காட்டுவது போதுமானதாகும்.

06. இந்த அறிவுறுத்தல்களுக்கு ஏற்புடையவாறு அனைத்துப் பணிகளையும் இரண்டு (02) நாட்களினுள் மேற்கொள்ள ஆவண செய்ய வேண்டும். அத்துடன், அனைத்து சந்தர்ப்பங்களிலும் அத்தியாவசிய குறைந்தபட்ச ஆளணிக்கு மாத்திரம் வரையறுக்கப்படும் வகையில் மேற்குறிப்பிட்ட விதந்துரைகளை வழங்க வேண்டும். மேலும், சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்படும் குறித்த காலத்திற்கான அறிவுறுத்தல்கள், ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் விளக்கங்களுக்கு ஏற்புடையவாறு அனைத்து விதந்துரைகளையும் வழங்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு இடம்பெறுவதை அவதானிப்பது அனைத்துப் பிரிவுகளினதும் பொறுப்பாகும் என்பதை வலியுறுத்துகிறேன்.

**காமினீ எஸ். செனரத்**

பிரதம அமைச்சரின் செயலாளர்

பிரதான வழிநடாத்தல் அதிகாரி – அத்தியாவசிய பொதுச் சேவைகளைத் தொடர்ச்சியாக வழங்குவதனை வழிநடாத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஜனாதிபதி செயலணி

பிரதிகள்:

| | |
|---|---|
| 01. ஜனாதிபதியின் செயலாளர்<br>02. அமைச்சரவையின் செயலாளர்<br>03. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு<br>04. செயலாளர், நிதி, பொருளாதாரம், கொள்கை அபிவிருத்தி அமைச்சு<br>05. செயலாளர், அரசாங்க, நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு | தயவுடன் தகவலுக்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும் |
| 06. செயலாளர், சுகாதார, தேசிய மருத்துவச் சேவைகள் அமைச்சு - | இந்த அனைத்து அனுமதிகளுக்கும் ஏற்ப செயற்படும்போது சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக செயற்படுகின்றார்களா என்பதை அடிக்கடி அவதானிப்பதற்கு |
| 07. அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்<br>08. அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்<br>09. அனைத்து பிரதம செயலாளர்கள்<br>10. பாதுகாப்பு பதவிநிலைத் தலைவர்/ இராணுவத் தளபதி<br>11. சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம்<br>12. அனைத்து மாவட்டச் செயலாளர்கள்<br>13. அனைத்து பிரதேச செயலாளர்கள்<br>14. அனைத்து உள்ளூராட்சி ஆணையாளர்கள்<br>15. ஏற்புடைய நிறுவனத் தலைவர்கள் | தயவுடன் தகவலுக்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும் |